<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 559/2022 நாள்: 14.02.2024 வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : J.சாதிக்பாட்ஷா | தொழில் | : |
| த/பெ | : ஜாபர் | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**<u>முதல் விசாரணை –</u>**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன். 13.09.2021– நானும் பிரதிவாதியும் செய்து கொண்ட தாவா கிரைய உடன்படிக்கை அசல் வா.சா.ஆ.1, 26.06.2022 ம் தேதிய என் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலவலக நகல் வா.சா.ஆ.2, 27.06.2022 ம் தேதிய பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3, 27.06.2022 ம் தேதிய பிரதிவாதியின் வழக்கறிஞர் எனக்கு அனுப்பிய அறிவிப்பு வா.சா.ஆ.4, 05.08.2022 ம் தேதிய என் வழக்கறிஞர் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.5, நான் பிரதிவாதியின் கணவருக்கு அனுப்பிய வாட்ஸ்ஆப் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.6, 13.07.2022 ம் தேதிய நான் கணியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தத தடை மனுவின் நகல் வா.சா.ஆ.7, 14.07.2022 ம் தேதிய கணியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.8, பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் ஜெராக்ஸ் வா.சா.ஆ.9, 22.06.2022 ம் தேதிய நான் பிரதிவாதியின் கணவர் மற்றும் மகள் மீது கொடுத்த புகாரின் முதல் தகவல் அறிக்கையின் நகல் (குற்ற எண்.342/2022) வா.சா.ஆ.10, 01.04.2021 ம் தேதிய வாதியின் கரூவைஸ்யா வங்கி உடுமலை கிளையின் 01.04.2022 முதல் 31.03.2022 வரையிலான கணக்கு பதிவுகள் கணிணி நகல் வா.சா.ஆ.11, 19.07.2022 ம் தேதிய வாதியின் CSB வங்கி உடுமலை

கிளையின் 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலாக கணக்கு பதிவு கணிணி நகல் வா.சா.ஆ.12, 04.01.2024ம் தேதிய வாதியின் CSB வங்கியின் உடுமலை கிளையின் 01.04.2022 முதல் 31.03.2023 வரையிலான காலத்திற்கு கணக்கு பதிவுகள் கணிணி நகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசராணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.